www.tamilarangam.net



# தமிழ்ப் புலி(ளி)ப்படைகளின் தமிழ் இரத்தவெறி

அன்புசால் வெளிநாடுகளில் வாழும் தமிழ்மக்களே! மற்றும் ஆதரவாளர்களே! தொடர்ந்தும் கண்மூடி மௌனிகளாக இராது விழித்தெழுங்கள்! தமிழீழத்தில் தமிழ் இரத்தம் வெள்ளக்காடாக ஓடுகிறதே ஏன் என்று பார்த்தீர்களா? தமிழீழ விடுதலைப்புலி(ளி)ப்படையினர் ஈவிரக்கமின்றி தமிழீழ விடுதலை இயக்கத்தினரை (TELO) அதாவது TELO போராளிகளையும் அவர்களது ஆதரவாளர்களையும் மற்றும் தமிழ் மக்களையும், குழந்தைகள் - வயோதிபர்கள் வரை சுட்டுக் கொலை செய்துள்ளனர். இவற்றை தட்டிக்கேளாது இன்னும் ஏன் மௌனியாக இருக்கிறீர்கள்? பெருமைத் தமிழ்மக்களே "தட்டிக்கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன்" என்பதுபோல் இந்த இரத்தவெறிபிடித்த புலிப் படையினர் பெருமைத்தமிழினத்தை படுகொலை செய்து அழிப்பதை இனியும் பார்த்துக்கொண்டிருப்பதா? நூற்றுக்கணக்கான தாய்மார்கள் தந்தைமார்கள் தமது அருமை செல்வங்களை ஈழப்போராட்டத்திற்கு அர்ப்பணித்து இப்போ இக்கோரப் புலிகளின் படுகொலைக்கு அவர்கள் ஆளானதைக்கண்டு ஐயோ என் வயிறு பற்றி எரிகிறதே என்று மாரில் அடித்து கதறுகின்றனரே அது உங்கள் காதுகட்கு கேட்கவில்லையா? தமிழ் மக்களே சிந்தியுங்கள். இந்தக் காடையர் கூட்டமா வரப்போகும் தமிழீழத்தில் எம்மை ஆளப்போகிறார்கள். இவர்களது ஆட்சி தமிழீழத்தில் வந்தால் எப்படி இருக்கும் என்று சிந்தித்தீர்களா?

தமிழ்மக்களே! ஒர் நாட்டின் ஆட்சியாளர்கள் எப்படி இருக்கவேண்டும் என்பதை நீங்கள் உணர்வீர்கள். அவர்கள் நல்ல குணம் உடையவர்களாக கடமை, கண்ணியம், கட்டுப்பாடு உடையவர்களாக, நாட்டு மக்களின் நலன்களை, தேவைகளை பார்க்கக்கூடியவர்களாக அல்லவா இருக்கவேண்டும். நாம் ஒர் வேலைக்கு மனுப்பண்ணும்போது, அவ்வேலைக்கான நேர்முகப்பரீட்சையில் நாம் எவ்வளவு நல்லவர்கள், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு உடையவர்களா, குறிப்பிட்ட வேலையை திறம்படச் செய்வார்களா என்றெல்லாம் பார்த்துத்தான் வேலையைக் கொடுப்பார்கள். அதே போலத்தான் அந்நாட்டை ஆளுபவரும் அந்நாட்டு வளர்ச்சிக்காக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அந்நாட்டு மக்களின் வளர்ச்சிக்காக யாவும் செய்யக்கூடிய தகைமையுடையவர்களாக இருப்பது அவசியம். அந்நாட்டில் சட்டத்துறை நிலைநாட்டவேண்டுமானால் அங்கு கொலை, களவு, பொய், கற்பழிப்பு, போதைவஸ்து வியாபாரம் மற்றும் கூடாத நடவடிக்கைகள் யாவும் தடை செய்யப்படவேண்டும். அதிலும் இந்த புலி(லி)ப்படையினரின் தலைமைகளை நாம் பார்த்தால் இவர்கள் எதில் சிறந்தவர்கள் என்பது புரியும். தலைவர் பிரபாகரன் முதல் சாதாரண புலித் தொண்டர்கள்வரை பாகுபாடின்றி கொலை, களவு, பொய், கற்பழிப்பு, போதைவஸ்து வியாபாரம், கள்ளக்கடத்தல்கள் இவற்றில் சிறந்தவர்கள். இவர்கள்தானா எமது வருங்காலத் தலைவர்கள்? இவர்கள்தானா எமது வருங்கால சமுதாயத்தின் வழிகாட்டிகள்? இவர்கள்தானா எமது தமிழ்ப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லப்போகிறார்கள்? தமிழ் மக்களே தட்டிக் கேளுங்கள். அன்பர்களே! ஒரு போராட்டம் என்றால் அப்போராட்டத்திற்கு ஒரு சரியான போராட்டத்திட்டம் இருக்கவேண்டும். அதோடு அத்திட்டத்திற்கு ஏற்ற போர்த்தந்திரமுறைகள் இருக்க வேண்டும். ஆனால் புலிகளின் போராட்டத்திட்டந்தான் என்ன? போர்த் தந்திரந்தான் என்ன? இதுவரை இவர்கள் எந்தவித போராட்டத் திட்டமுமின்றி, தாக்கிவிட்டு ஓடி ஒழியும் போர்த்தந்திர முறையை மட்டும் வைத்துக்கொண்டிருக்கின்றனர். இக்கோழைகளின் இப் போர்த்தந்திரத்தால் இதுவரை இறந்த தமிழ்மக்களோ ஆயிரமாயிரம், இழந்த சொத்துக்களோ கோடிக்கணக்கில், இழந்த தமிழ் நிலப்பரப்போ அளவற்றவையே. தமிழ் மக்களே இவர்களது இந்த போர்த்தந்திர முறையைப் பார்த்து சிந்திக்கவில்லையா? இவர்கள் ஐந்து மாதமாக செய்த கொலைகளையும் கொள்ளைகளையும் பார்த்து மறந்து விட்டீர்களா? அதன் எதிர்த்தாக்குதலால் அழிந்த ஐந்து இறந்த ஆயிரமாயிரம் தமிழ்மக்களைப் பார்த்து இப்போர்த்தந்திர முறை பிழையானது என்பதை நீங்கள் உணரவில்லையா? இச்சாதக வீரர்களின் கடந்தகால சம்பவங்களைப்பார்த்து மார்புதட்டிய நீங்கள், இப்போ வளர்த்த கடா மார்பில் பாய்வது போல் இவ்விருதலைப் புலி(லி)யினர் உங்கள் சொந்த சகோதரர்களையே, அருமைச் செல்வங்களையே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படுகொலை செய்து இந்த வெறியாட்டம் அத்தனையுள்ளவரை எளிமையாக பார்த்துக் கொண்டிருக்கப் போகிறீர்கள். என்ன, நீங்கள் எல்லாம் ஊமையானவர்களா? அன்பார்ந்த தமிழ் மக்களே, வீரமறவர் பரம்பரை என பெருமைப்படும் தமிழினமே, விழித்தெழுந்து இந்த அநியாயத்தை, அக்கிரமத்தை படுகொலை வெறியை தட்டிக் கேளுங்கள். இப்புலிப்படையினரை விரட்டி அடியுங்கள்.

அன்பர்களே! கடந்தகாலத்தில் இவ் விடுதலை(காலி)ப் படையினர் செய்த சாதனைகளை இங்கொருத்தில் நினைவுபடுத்த விரும்புகிறோம்.

முதலாவது - இவர்கள் EROS ஆதரவாளரான சரவணன் என்பவரை, அவர் பிரபாகரனுக்கும் அமிர்தலிங்கத்துக்குமிடையில் இருந்து வந்த நெருங்கிய தொடர்பினை விமர்சித்திருந்ததற்காக கொலை செய்தார்கள்.

இரண்டாவதாக PLOTE அனுதாபகரான இராணுவத்துறைபதியான சுந்தரம் என்பவரை சித்திரா அச்சகத்துள் வைத்து சுட்டுக்கொன்றுள்ளனர். சுந்தரம் ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத்தாக்குதலில் முன்னணி வகித்தவராவார்.

அடுத்து 11-12-85 அன்று PLOTE போராளிகளான கொக்குவிலைச் சேர்ந்த இரவீந்திரன், மாதகலைச் சேர்ந்த பண்டா, அரியாலையைச் சேர்ந்த ஜெயதிலகராஜ் ஆகியோரை வாளாலும் கத்தியாலும் வெட்டி அதன்பின் துப்பாக்கியால் சுட்டு படுகொலை செய்துள்ளனர்.

- இந்தியாவில் PLOTE இன் தலைவர் உமாவையும் அவரது மெய்ப்பாதுகாவலர்களையும் கொலை செய்ய முயன்றது. இதனால் பிரபாவும், உமாவும் இந்திய சிறையில் சிலதினங்கள் இருந்துள்ளனர்.

- பின் MARCH 1985ல் இந்தியாவில் PLOTE இன் இராணுவக் கொமாண்டர் கண்ணனையும் சக போராளியான ரவி என்பவரையும் படுகொலை செய்ய முயன்றதும் அவர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காயத்தோடு தப்பியதும், இச்சம்பவத்தால் புலிகளைச் சேர்ந்த இருவர் கைது பின் விடப்பட்டார்கள் (Times, March 14, 1985)

மூன்றாவதாக, EPRLF ஐச் சேர்ந்த கப்டன் இளங்கோ (ரோகன்) வசாவிளா பகுதிக்கு பொறுப்பாக இருந்தவர் புலிகளால் கதைப்பதற்கு என அழைக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டு மரத்தோடு கட்டப்பட்டார்.

அதன்பின் மானிப்பாய்ப் பொறுப்பாளரான ஜெகநாதன் (அஜித்) படுகொலை செய்யப்பட்டார். இவர் யாழ் கோட்டை இராணுவமுகாமை தாக்குவதில் பங்கெடுத்து முன்னணி வகித்தவர். சம்பவம் நடந்த தினமும் கோட்டை இராணுவ முகாமுக்கு போராளிகளோடு போய்க் கொண்டிருந்த வேளையே சுடப்பட்டார். மேற்கூறிய இரு போராளிகளும் சர்வதேச பயிற்சி முகாம் ஒன்றில் பயிற்சி பெற்றவர்கள்.

அதைத் தொடர்ந்து தமது முகாமைப்பார் வையிடச் சென்ற EPRLF முக்கிய உறுப்பினர்களான தேவாவையும், சுதாவையும் ஒளித்திருந்து தாக்குதல் நடத்தினார்கள். இதில் தேவா தப்பியோட மெய்ப்பாதுகாவலர்களில் ஒருவரான பசீர் காயமடைந்தார். இதைத் தொடர்ந்து வைத்தியசாலை சென்ற 3 EPRLF பெண்களை கடத்திச் சென்றனர்.

நான்காவதாக TELA அமைப்பின் தலைவர் ஒபரோய் தேவனை கொலைக்காரன் எனக் கூறி சுட்டுப் படுகொலை செய்தனர். தேவன் தமது ஆதரவாளர்களோடு பலதரப்பட்டவைகளைச் செய்தவர். இதைப் பொறுக்க முடியாத புலிகள் அவரை படுகொலை செய்தனர் என்பது தான் உண்மை. அதன்பின் TELA யின் மீதியான உறுப்பினர்களான சிவா, யோகன், சுமன், சந்திரன், பிரகாஷ் ஆகியோரை ஆயுதங்களால் படுமோசமாகத் தாக்கிவிட்டு பின் புதைகிடங்கு வெட்டுவித்து அதனுள் சுட்டுவீழ்த்தி புதைத்தனர். இதை புலிகளின் வன்னி மாவட்ட கொமாண்டர் மாத்தயா செய்தார்.

ஐந்தாவதாக. TELE இயக்கத்தவர் ஜெகனை சுட்டுக் கொன்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



6வதாக TEA அமைப்புத் தலைவர் மகேஸ்வரனை கடத்திக் கொல்ல முயற்சித்ததையும் அவர் தப்பியுள்ளதாகவும் அறிகிறோம்.

ஏழாவதாக TULF பாராளுமன்ற உறுப்பினர்களான ஆலாலசுந்தரத்தையும் தர்மலிங்கத்தையும் கதைக்க எனக் கூப்பிட்டு பலவந்தமாக அப்பால் கொண்டு சென்று படுகொலை செய்து தெருவோரத்தில் போட்டுவிட்டுப் போயினர்.

எட்டாவதாக TELO அமைப்பைச் சார்ந்த மனோமாஸ்டரை புலியில் இருந்து பிரிந்து TELO வில் சேர்ந்தார் என்ற காரணத்திற்காக படுகொலை செய்து மின்கம்பத்தில் கட்டித் தூக்கினார்கள்.

அடுத்து 25-7-85 கிளிநொச்சியில் போராளி கோபாலகிருஷ்ணனையும், 8-8-85 ல் நெல்லியடியில் முகாம் பொறுப்பாளி அன்பினையும் சுட்டுப் படுகொலை செய்துள்ளனர்.

மருதமடத்தில் புலேஸ், பொன்னர் ஆகியோரையும் பிருந்தாவிலில் நால்வரையும் சுட்டுக்கொலைப்படுத்தியுள்ளனர். அதோடு நாவற்குழியில் இருவரை கட்டுக் கொண்டும் இன்னும் ஒருவரை சுட்டுக்கொலைப்படுத்தியுள்ளனர்.

இவற்றை விட இருதடவை TELO தலைவர் சிறீசபாரத்தினத்தை படுகொலை செய்ய முயற்சித்து தோல்வி கண்டுள்ளனர்.

இப்படியே இவர்களது கொலைப்பட்டியல் நீள்கிறது. இப்படியான, மாற்று இயக்கத்தவர்களை கொலை செய்வதை விட இவர்களது இயக்கத்திலேயே நூற்றுக்கணக்கானோர் கொலை செய்யப்பட்டுள்ளனர். அவர்களைப்பற்றி புலியில் இருந்து பிரிந்தவர்களைக் கேட்டால் சொல்லுவார்கள். அவர்களது பூத உடல்கள் இந்திய மண்ணில் பல புதைகுழிகளும், செம்மணி, காக்கைதீவு ஆகிய புதைகுழிகளும் மறைக்கப்பட்டுவிட்டன. ஆனால் அப்போராளிகளின் தாய், தந்தையரோ தமது மகன் இன்று வருவான் என வழிமேல் விழிவைத்து காத்துக்கிடக்கின்றனர். மேற்கூறிய கொலைகளைவிட சமூகவிரோதிகள் எனவும், காட்டிக்கொடுப்போர் எனவும், களவெடுப்போர் எனவும் படுகொலை செய்யப்பட்டு மின்கம்பங்களில் கட்டப்பட்டோர் எத்தனை! எத்தனை!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அடுத்து இவர்களிடம் கேட்டால் சொல்லுவார்கள் நாம் கொள்ளையடிப்பதில்லையாம் வங்கியிடம்தானாம் அவர்கட்கு காதல். வங்கியைவிட வேறு எங்கும் கொள்ளையிடவில்லையாம். ஆட்களை கடத்தி பணம் (RANSOM) பெறுவதில்லையாம், போதைவஸ்து கடத்தல்கள் செய்வதில்லையாம். 'முழுப்பூசணிக்காயை சோற்றுள் புதைத்த மாதிரி" என்று கூறுவார்களே அப்படித்தான் இவர்களது கதை. காரணம் அப்படி வளர்ந்தவர்கள் அவர்கள்.

இவர்களது தலைவரை 16 வயதில் ஆடு, மாடு, மற்றும் ஆனைகளை எல்லாம் சுறந்து தமிழர்கட்காக பிறந்த 'அவதாரம்' என்றே இப்புலித் தொண்டர்கள் கூறுவார்கள். 16 வயதினிலேயே அரசியல் மேதையானவராம். அவரது அறிவுத்திறனை வெளிப்படுத்திய வாய்ப்புக்கள் தொலைக்காட்சியில் (T.V) பார்த்திருப்பீர்கள். அவரது அரசியல் பாடம்புகட்டிய புத்தகம் என்ன என்றால் ஆனந்தவிகடனும் குமுதமும் என்பார், அதில் வரும் சாகசக் கதைகள் தான் அவரை உணர்வுபூர்வமும் புரட்சிவாதியாக்கியதாம். ஆனால் இந்த படுகொலை வெறிபிடித்த புலி(லி)த் தலைவனின் குரு யார் தெரியுமா? ஆரம்பத்தில் கப்பக்காரனும், பிரபல கொள்ளைக்காரனுமாகிய கல்வியங்காட்டைச் சேர்ந்த செட்டி என்பவனாகும். அவனது தலைமையில் பல வீடுகளை கொள்ளையிட்டு, பல அப்பாவிப் பெண்களின் தாலிகளை அறுத்து, கள்ளக்கடத்தல்களிலும் பேர் போனவர்தான் இப்புலிகளின் தலைவன். இத்தலைவனின் தலைமையில் 'தமிழ் புதியபுலிகள் (TNT),' என்றபேரிலும் பின் 'தமிழீழ விடுதலைப்புலிகள்' (LTTE) என்ற பெயரிலும் நடந்த மேலே கூறிய படுகொலைகளைவிட நடந்த கொள்ளைகள், கப்பம் வாங்குதல், போதைவஸ்துக் கடத்தல் என்பவற்றிலும் சிலவற்றைப்பார்ப்போம்.

முதலாவது- புத்தூரில் நவக்கிரி என்ற இடத்தில் ஓர் வீட்டு உரிமையாளரைக் கொன்று அவ்வீட்டு நகைகள் யாவற்றையும் கொள்ளையிட்டபின் அங்கு இருந்த மற்றவர்களையும் அடித்துக் கட்டிவிட்டு போய் விட்டனர். பின் அதைச் செய்தவர்கள் செல்லன் என்றனர். அன்பர்களே! இப்புலிப்படையினர் தமது இப்படியான வேலைகட்கு நாமே செய்து விட்டு செல்லன் உரிமை கோருகிறது என கூறி தமது கடந்ததைத் மறைக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளவேண்டும்.

இரண்டாவது. கல்வியங்காடு ஜெயரத்தினம் வீட்டிற்கு சென்று மிரட்டிக் கொள்ளையிட்டதோடு அவரது காரையும் கடத்திச் சென்றுள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மூன்றாவது - வவுனியாவில் முகாமிலிருந்து பாதுகாப்புக்கு வந்தவர்களுக்கு கூடி 50,000 ரூபாயும் 2 பெட்டி அரிசியும் கப்பம் வாங்கியது.

நான்காவது - வல்வெட்டித்துறை தொழிலதிபரான விஸ்வநாதன் என்பவரை பலாத்காரமுறையில் கடத்திச் சென்று 1½ கோடி ரூபாவை காசாகவும் நகையாகவும் அபகரித்தனர்.

ஐந்தாவது - பலவர்த்தகர்களை யாழில் கடத்தி ஆயிரக்கணக்கான ரூபாய் தினியும் பொருட்களையும் கப்பமாகவாங்கியுள்ளனர்.

ஆறாவது - வல்வெட்டித்துறையில் பல பிரமுகர்களில் பட்டியல் போட்டு ஒவ்வொருவரிடமும் 2-3 லட்சம் ரூபா என கப்பம் வாங்கியுள்ளனர். இவர்களில் சந்தானம், பிரதீபன் என்பவர்கள் உட்பட 45 பேர் அடங்குவர்.

போதைவஸ்து கடத்தும் விடயத்தைப் பார்த்தோமானால், "போதைவஸ்து விற்பனை ஒரு தற்கொலை" என்ற புலிகளின் துண்டுப்பிரசுரத்தில் "போதைவஸ்து விற்பனையால் ஒரு சமுதாயத்தை அழிக்கிறோம், ஒரு சமுதாயத்தை நச்சாக்குகிறோம், ஒரு சமூகத்தின் எதிர்ப்பை சம்பாதிக்கிறோம்..." இப்படி எழுதியுள்ளனர். ஆனால் நடைமுறையில் அப்படியல்ல என்பதற்கு சில உதாரணங்களை கீழே தருகிறோம்.

முதலாவது - புலி அமைப்பைச் சேர்ந்த நாதன் என்பவர் - இவர் சுவிட்சர்லாந்தில் பேசல் (BASEL) என்னுமிடத்தில் இருப்பவர். புலிகட்காக பணம் சேர்ப்பவர். போதைவஸ்துக்கள் வியாபாரம் செய்பவர். தற்சமயம் போதைவஸ்தோடு பிடிபட்டு சுவிட்சர்லாந்து சிறையில் உள்ளார். இவருடன் FRANCE ல் PARIS ல் வாழும் புலி அமைப்பை சார்ந்த சுரேந்திரனும் சேர்ந்து பணம் சேர்ப்பவர்கள் என்பது தெரியப்பட்டுள்ளது.

இரண்டாவது - ஜெனிவாவில் கந்தையா வாமதேவன் என்பவர் 13 வருடத்திற்கு மேலாக வாழ்பவர். UN ல் வேலைபார்த்தவர். புலிகளின் போதைவஸ்து பணம்யாவும் தனது வங்கிக்கணக்கில் போட்டு பிரபாகரனுக்கு அனுப்புபவர். இவரும் இவரது மனைவி, மூன்று பிள்ளைகள் மைத்துனி உட்பட பலர் அண்மையில் ஜெனிவா சிறையில் உள்ளனர். இப்போ அவரது மனைவியும் அவரும் 4 மாதங்களுக்கு மேலாகியும் சிறையில் இருந்து வாடுகின்றனர்.

மூன்றாவது - FRANCE ல் புலிகளின் பொறுப்பாளராக இருந்த [illegible] என்பவர் ஜெனிவாவில் பலலட்சம் பெறுமதியான போதைவஸ்துக்களோடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



FRANCCE காசோரும் பிடிபட்டு சிறையில் உள்ளார். இப்படி யே எழுதினால் இவர்களது போதைவஸ்து வியாபார பட்டியலும் நீண்டு கொண்டே போகும்.

அன்பர்களே; நாம் இதுவரை புலிப்படையின் கடந்தகால அவர்களது கொலை, கொள்ளை, கப்பம் வாங்குதல், ஆட்களைக் கடத்தல், போதைவஸ்து வியாபாரம் பற்றியெல்லாம் பார்த்தோம். இவற்றைவிட இவர்கள்

அப்பாவிப் பெண்களை துவக்குமுனையில் கடத்துவதிலும் வல்லவர்கள் என்பதை யாழ்பல்கலைக்கழகத்தில் உண்ணாவிரதம் இருந்த பெண்களை கடத்திச் சென்று தலைவர் பிரபாகரன் உட்பட சிலர் அப்பெண்களை வலோற்காரக் கலியாணமும் கட்டியுள்ளார்கள் என்றும் அறிந்திருப்பீர்கள். நமது பழைய சம்பவங்களை ஆதாரம் நீதி நியாயம் கோரி EPRLF இன் மனோ அசோகபாலா CEUS இனால் ஆரம்பிக்கப்பட்ட இந்த உண்ணாவிரதத்தில் EPRLF இந்து சார்பாக அதில் வேலை செய்த பெண்களே இவ்வுண்ணாவிரதத்தில் இருந்தவர்களும் பின் புலிகளால் இந்த விதமாகவும் உடுத்த துவக்குமுனையில் கடத்தப்பட்டவர்களுமவர். இப்புலிகள் தமது இந்த அடாவடித்தனத்தை EPRLF உடன் சண்டையாகவே செய்துள்ளனர். திரைப்பட ஆட்களின் விளையாட்டுகள் போன்றே இங்கேத் தான் நடந்துள்ளன. இவர்கள் இப்பெண்களது உயிர்ப்பிச்சை கொடுத்துள்ளனராம். 'ஆடு நனைகிறது என்று நாய் அழுகிறதாம்' என்று கூறுவது போல் இருக்கிறது பிரபாவின் கதை. அவரது சொந்த வசனத்தையே கேளுங்களேன்.

"உங்கள் செல்வங்களை நாம் மரணத்தின் பிடியில் இருந்து காப்பாற்றிச் ~~சென்றது தவறா? செய்யலாமா? இதனை~~ வாத ஆட்களின் கைகளில் கதிபுதிவிட்டு இம்மாணவர்களை நாம் ~~அரவணைத்துக் கொண்டது~~ தப்பு செய்ததா? நிச்சயமாக நீங்கள் எமது சாதுரியமான துணிச்சலான நிர்க்கமான செயலைப் பாராட்டவே செய்வீர்கள்" (பிரபாகரன் 28-1-1984).

இதைப்பற்றி மேலும் கூறும் போது

"உண்ணாவிரதிகளின் உயிரைக் காப்பாற்றுவதே எமது பிரதான நோக்கமாக இருந்தது. மனித உயிருக்கு மதிப்பளிக்காத, ஈவிரக்கமற்ற இனவாத அரசுக்காக தமிழினத்தின் உயிர்கள் அநியாயமாக பலியிடப்படுவதை நாம் விரும்பவில்லை. (பிரபாகரன் 28-1-1984)

பிரபாகரன் தமிழ் மக்களின் உயிர்களில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


வைத்துள்ள கருணையைப்பார்த்தீர்களா? சும்மா சொல்லக் கூடாது, பிரபாகரனின் கருணை எப்படி மேலே போய் உள்ளூறவிடாதும் இருந்த பெண்களை கடத்தியதோடு விடாது கடத்திய பெண்கள் எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதையும் கவனியாது தமது இயக்கக் கட்டுப்பாடுகளையும் மீறி அப்பெண்ணின் விருப்பம் இன்றியோ கல்லாமலோ திருமணம் புரிந்து உயிர்களையும் பெருக்கியுள்ளார்கள். [PLOTE அமைப்பு தொடங்கியதே உமா ஒர் பெண்ணை காதலித்தார் என்ற காரணத்தால், அவரை இவர்கள் LTTE யில் இருந்து விலக்கினார்கள்]

இந்த மேலே கூறிய அவரது கருணை பெண்களை விட்டு மற்றவர்கட்கு இல்லை என்பதை மேலே இவர் சக போராட்ட இயக்கங்களையும் அதன் பின்னணியில் போராளிகளையும் திட்டமிட்டு படுகொலை செய்த கதைகளைப்பார்த்து புரிந்து கொள்வீர்கள் என எண்ணுகிறேம்.

நாம் மேலே கூறிய இவர்களது கடந்தகால அட்டகாசங்கள், இரத்தவெறிபிடித்த படுகொலைகள் ஆகியவற்றை விட கடந்த வாரத்தில் அதாவது ஏப்ரல் மாதம் 28, 29, 30 ம் திகதிகளில் நடந்த இரத்த வெறியாட்டம், படுகொலைகள், யாவற்றையும் பார்த்து உலகில்வாழும் மக்கள் அத்தனை பேருமே கண்ணீர் வடிக்கிறார்கள். இவர்களது இரத்தவெறியாட்டத்தால் தமிழீழப் பகுதியெங்கும் தமிழ் போராளிகளின் இரத்தம் வெள்ளக்காடாகப்பாய்கிறது. இப்போராளிகள் TELO அமைப்பைச்சார்ந்தவர்கள். இப்புலிக்கூட்டம் ஒரே நோக்கில், நாம் முன்பு திட்டமிட்டபடி TELO அமைப்பின் முகாம்கள் அனைத்தையும் தாக்கி நூற்றுக்கணக்கான போராளிகளையும் அவர்களது ஆதரவாளர்களையும், இதில் குழந்தைகள் உட்பட பெண்கள் முதியோர் யாவரையும் சுட்டுப்படுகொலை செய்துள்ளனர். நூற்றுக்கணக்கான போராளிகளை சரணடையச் செய்து அவர்களது ஆயுதங்களையும் கைப்பற்றியுள்ளனர். நூற்றுக்கணக்கான பொது மக்களும் போராளிகளும் கவலைக்கிடமான நிலையில் வைத்திய சாலையிலும் தனியார் மருத்துவ விடுதியிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவற்றைவிட சரணடையச் செய்த போராளிகளை உலகில் எங்குமில்லாதவாறு கைகள் இரண்டையும் பின்புறம் கட்டி அவர்களது வாகனங்களுள் போட்டு குண்டுகளை வீசி படுகொலை செய்திருக்கிறார்கள். அதைவிட இறந்த உடல்களையும் அரைகுறை உயிரோடு இருந்தவர்களையும் தெருவோரங்களில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போட்டு அதை நிறைவாக கொளுத்தியுள்ளனர். இவரது கருணை, அன்பு, பாசம், பரிவு எல்லாம் எங்கேயோ?
அன்பர்களே உண்மையில் இப்படி கொலைகள் எப்படி இப்புலிகட்டால் செய்யப்பட்டன? இதனால் தமிழினத்திற்கு ஏற்பட்ட லாபம் நட்டம் என்ன? புலி இயக்கத்துக்கு ஏற்பட்ட லாபநட்டம் என்ன என்பதை நாம் ஆராய்தல் அவசியம்.

இப்படி கொலைகள் புலிகள் கூறுவது போல் ஒரு புலியை TELO சுட்டதாலோ அல்லது 24 புலிகளைக் கடத்தியதாலோ அல்ல. உண்மையில் அப்படியானால் அதை வடிவாக அவர்கள் பேசித்தீர்த்திருக் கலாம். கடந்த காலத்தில் இருந்து பேச்சுவார்த்தை சம்பவங்கள் நடக்கவே, இன் புலிகள் அதற்கு எதிராக இப்படியான காட்டுமிராண்டி விளையாட்டு விட்டுவிட்டு. சகபோராளியை சுட்டுக்கொலை செய்து அந்த ஆயுதத் தை எடுத்தா இவர்கள் தமிழீழம் அடையப்போகிறார்கள். உண்மை யில் இவர்கள் பலவாரங்களாக திட்டமிட்டே இந்த படுகொலை நாட கத்தை நடத்தியுள்ளனர். இவர்களது இந்த அராஜகத்தாலும் அடாவடித்தனங்களாலும் தமிழீழப் போராட்டம் பலமையில் கற்கள் பின்னுக்கு தள்ளப்பட்டுவிட்டது. யாழில் நடந்த ஓர் சிறு சம்பவத்தைக்காட்டி ஓர் அமைப்பை அல்லது ஓர் இயக்கத் தையே நிர்மூலமாக்க வெளிக்கிட்டுள்ளார்களே இவர்களை என்ன என்பது. தமிழீழப் போராட்ட வெற்றியும் பார்க்க தனிப்பட்ட சிறு பிரச்சினைக்கு இப்புலிகள் முதலிடம் கொடுத்து நடந்தால் தமிழ் மக்கள் தொடர் ந்தும் பேசாமடந்தைகளாக பார்த்துக் கொண்டு இருக்கமாட் டார்கள் என்பதை இப்புலிகட்கு சொல்லி வைக்க விரும்புகிறேன்.

"பெறுவோம் பெறுவோம் தமிழீழம் பெறுவோம்" என்பாடிய இந்த TELO போராளிகளை "தமிழீழம் எமது தாகம்" என்று கூறும் போராளிகள் கோரத்தனமாக சாகடித்துள்ளார்கள். தமது சிறு பிரச்சினைகளைப் பேசித்தீர்க்க முடியாத இப்புலிகள் எடுத்ததற்கெல்லாம் ரிகர் தட்டத் தொடங்கி விட்டார்கள். ஒன்று இரண்டு கொலை களைத் தொடங்கி இப்போ நூற்றுக்கணக்கில் என்று போய்க் கொண்டிருக்கிறது. "தட்டிக் கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன்" என்பது போல் தம்பியின் அரா ஜகம் தமிழ் மக்களால் பொறுக்க முடியாத அளவுக்கு வந்துவிட்டது தமிழினமே! நாம் பொங்கி எழுந்து இத்தம்பியின் அராஜக அடாவடித்தனத்திற்கு முற்றுப்புள்ளி வைக்காவிடில்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழீழத்திற்காக தமது இன்னுயிரை ஈந்த ஆயிரக்கணக்கான தமிழ் மக்களின் உயிர்களும் வீண் விரயமே. அவர்கட்கு நாம் செய்யக் கூடிய கொன்றிக்கடன் இப்படியான மனித வேட்டையாடித் திரியும் இந்த வெறிபிடித்த புலிக்கும்பலை தமிழ் மக்கள் மத்தியில் இருந்து விரட்டியடிப்பதாகும். இம் மிருகங்கள் உண்மையிலேயே மிருகத்திலும் கேவலமானவர்கள். உண்மையான புலிகள் காடுகளில் புலிகளைக் கொன்று சாப்பிடுவதில்லை. ஆனால் இந்த மனிதப் புலிகளோ தமது இனத் தமிழ் மனிதர்களைக் கொன்று தமது வயிற்றுப்பாட்டைப் பார்க்கிறார்கள் என்றால் மிகையாகாது. இம் மிருகங்களின் படுகொலை, இரத்த வெறியால் பல ஆண்டுகளாகக் கட்டி வளர்க்கப்பட்ட ஓர் அமைப்பு சீர்குலைக்கப்பட்டுள்ளது. இதே நிலை மற்றைய அமைப்புக்கட்கும் வந்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. ஆனால் இப்புலிகட்கு விளங்கவில்லை இத்தச் சேட்டையால் கடைசியில் தம்மை சிங்கங்கள் சாப்பிடப் போகிறது என்று. அப்படியான ஓர் நிலை வருமானால் நாம் முன்பு இருந்த நிலையிலும் பார்க்க 100 ஆண்டுகட்கு பின்தள்ளப்படுவோம் என்று கூறினால் மிகையாகாது.

ஆனால் தமிழ் மக்களே 'புலிகளின் தாகம் தமிழ்த் தாயகம்' என்பதில் ஏதாவது உண்மையிருப்பதாகவோ அதை அவர்களால் தனிய செய்து முடிக்கும் என்பதில் உண்மையிருப்பதாகவோ நம்பி ஏமாந்து விடாதீர்கள். இவர்கள் தமிழீழத்திலும் அவர்களது தமிழ் பிரச்சார ஏடுகளிலும் எழுதுவது ஒன்று. அவர்களது செயற்பாடு மற்றொன்று. தமிழீழம் பெற்றுத் தருவோம் என்பவர்கள் இப்பு பேச்சுவார்த்தைக்கு போவார்களா? இப்புலிகளது அரசியல் ஆலோசகர் A.S. பாலசிங்கம் பலதடவை பத்திரிகைகட்கு நாம் பிரிவினை வாதிகள் அல்ல என்று கூறியுள்ளார். கடந்தமாதம் இந்தியாவில் இருந்து வரும் 'THE ILLUSTRATED WEEKLY OF INDIA' என்ற பத்திரிகைக்கும் அவர் கூறும் போது "WE ARE NOT SECCESSINISTS" என்று கூறியுள்ளார். எனவே இந்த படுகொலைகளால் நீங்கள் என்ன விளங்கிக் கொள்கிறீர்கள்? தமிழீழம் கிடைக்குமோ இல்லையோ வரப்போதும் அல்லது கிடைக்கப் போகும் தமிழீழப்பகுதிக்கு புலியாட்சி செய்யும் யோசனையே பிரபாகரனுக்கு. இதைவிட வேறு திட்டமிருக்கவேயாது.

இக்கட்டத்தில் கொலை வெறியை ஈழச் செய்தி அழகாக எழுதியுள்ளது. அதில் ஒரு பகுதியைப் பார்த்தால்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"... சக விடுதலை இயக்கங்களைக் கண்டு பொறாமைத்தீயில் வெந்து விடுவதும், தோழமை அமைப்பில் உள்ள 'பலசாலிகளைக் கொன்றால் நாம் பெரு சாம்ராஜ்யசாலிகள்' என பறைசாற்றிக் கொள்வதும்; கையாலாகாச் சிறுமைத் தனம் மட்டுமல்ல சிறிலங்கா அரசின் படைகளுக்கு எந்த வகையிலும் நாம் குறைந்தவரல்ல என்பதைக் காட்டிக் கொள்வது; மக்கள் மத்தியில் குழப்பத்தையும், எதிரிக்கு சாதகத்தையும் ஏற்படுத்தி விடும் என்பதில் ஐயமில்லை".

தமிழீழப் போராட்டத்தில் நம்பிக்கையுள்ள மக்களே சிந்தியுங்கள்! இந்த விடுதலை(கொலை)ப் புலிப்படைகளை அடையாளம் கண்டு விரட்டியடியுங்கள். அவர்களை வீட்டுக்கு அழையாதீர்கள். பணம் கொடாதீர்கள் - இப்பச்சோந்திகளை அழித்தொழிக்காவிட்டால் தமிழீழம் ஓர் படு கொலை வெறிபிடித்த சர்வாதிகாரக்கும்பலின் கைக்குள் போகும் என்பதில் ஐயமில்லை. அந்த அபாயத்திற்கே இடமிருக்காது. உலகில் பலபாகங்களிலும் இப்படி புரட்சிப் போராட்டங்கள் நடைபெறுகின்றன. அங்கும் பல இயக்கங்கள் பலவித திட்டங்களோடு தான் உருவாகின்றன. ஓர் கால கட்டத்தில் ஒருமித்தவர்களோடு சேர்ந்து போராடுகிறார்கள். பின் மக்கள் அமைதியாக முறையிலே அரசு ஆட்சி எப்படி இருக்க வேண்டும் என்று முடிவு செய்கிறார்கள். ஆனால் தமிழீழத்தில் நடந்ததாம் நடந்ததென்ன. தமிழீழப் போராட்டத்தை நடத்த நாமே தீர்வை எடுத்துக்கொண்ட ஓர் கும்பல் TELO அமைப்பை அது வெள்ளைப்படி பல கொலை செய்து சின்னபின்னப்படுத்தியுள்ளது. மக்களின் ஆதரவோடு இவர்கள் நடைமுறைப்படுத்தினராம். எந்த மக்கள்? TELO வைப் பெரும்பான்மையான மக்களே அனுதாபட்ட விகி சரியான அமைப்பை காட்டியிருப்பர். ஆனால் நடந்ததென்ன. மக்களில் இருந்து அன்னியப்படுத்தப்பட்ட இக்கும்பல் தாம் மக்கள் பிரதிநிதிகள் என மார்பை தட்டுகிறார்கள். இப்புலிகளை விட்டு விலகுவோரை நாய்க் கொல்கின். இதை அறிந்த புலிகளின் பொறுமையாளர்களே இதை எதிர்க்கிறார்கள்.

"சுதோகந்துக்கு பிசு" என்ற தலைப்பில் புலிகளால் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரமொன்றில் '... மேது இயக்கத்தை தொடக்கி, இயக்க அமைப்பிலும், பயிற்சியிலும் பெரும்பங்காற்றியவரும் பிரபாகரன் இயக்கம் சார்பிலே புகழ் பெற்ற பின்பும் கூட இயக்கப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரசாரங்களில் அதை பெயரை விளம்பரப்படுத்தவில்லை" என்று கூறுகிறது. (9-3-85) மக்களே சொல்லுங்கள், இதைப்பார்த்து சிரிப்பதா! அழுவதா! இவர்களால் வெளியாகும் பிரசுரங்களின் பக்கத்துக்கு பக்கம் திருவாளர் பிரபாகரன் அவர்கள் பல துவக்குகளோடும் பலவித உடைகளோடும் 'கோடம்பாக்கம் ஸ்ரூடியோவில்' எடுத்த படங்கள் தான் வருகின்றனவே. இதை விட விளம்பரம் வேறென்ன வேண்டும். இப்போது பயிற்சி முகாம் சாதுவிளையாட்டுக்களை படம் பிடித்து அதைக்காட்டி பணம் சேகரிக்கிறார்களே இது விளம்பரம் மட்டுமல்ல மக்களை ஏமாற்றுவதுமாகும்.

அன்பர்களே எமது தமிழீழப் போராட்டத்தில் இப்படியான ஓர் தம்பல் இப்படியான நிலைமையால் வந்தது தமிழர்களின் சாபக்கேடேயொழிய வேறில்லை. இன்றேல் எந்தவித திட்டமுமற்ற இப்படியான சம்பவங்களைச் செய்து சரியான திட்டங்களோடு சரியான போர்த்தந்திரங்களோடு வேலை செய்து கொண்டிருந்த இயக்கங்களையும் இயங்கவிடாது தடுப்பார்களா? "வைக்கோல் பட்டடை நாய் போல" என்று ஒர் பழமொழியுண்டு தெரியுமா. தானும் சாப்பிடாது மாட்டையும் சாப்பிடவிடாது. அதுபோலத்தான் இப்புலிகளும், தாமும் செய்ய மாட்டார்கள் செய்யக்கூடியவர்களை செய்யவும் விடமாட்டார்கள். 'நாங்கள் நினைத்தபடி' அதுபோல இந்த புலிகளும் எதிரியான்பவர்கள் யார் என அடையாளம் காணமுடியாது சக போராளிகளையும் தமிழ் மக்களையும் சுட்டு படுகொலை செய்து வெற்றிவிழாக் கொண்டாடுகிறார்கள். இந்த மிருகங்களினை எமது போராட்டப்பாதையில் இருந்து விரட்டுவோமாக!

புலிகள் பற்றி பிரித்தானிய பத்திரிகையொன்று கூறுவதாவது.

"THE TAMIL TIGERS ARE NOT WANTED BY THE TAMIL MAJORITY; BUT THEY HAVE THE ARMS AND THE MONEY, AND THERE IS NOTHING WHATEVER THAT VILLAGERS UNDER THEIR SWAY CAN DO."

(THE WESTERN MORNING NEWS, MARCH 1985).

ஒற்றுமையை வேண்டி நிற்கும் தமிழ் மக்கள்
LONDON 2.5.1985.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்